


தமிழ்
# மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிறு, அக்டோபர் 18, 2026 | இதழ் 188

## மத்திய அரசால் ஆந்திராவுக்கு கிடைத்த நன்மைகள் - முதல்வர் விஜயிடம் பட்டியலிட்ட சந்திரபாபு நாயுடு

சென்னை, 18 அக்டோபர் 2026: மத்திய அரசுடன் இணைந்து செயல்படுவதால், ஆந்திராவில் செயல்படுத்தப்பட்டு வரும் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் குறித்து, அம்மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு, முதல்வர் விஜயிடம் எடுத்துக் கூறியதாக தெரிய வந்துள்ளது.

பிரதமர் மோடி, கடந்த வாரம் சென்னை வந்து, 13,000 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்தார். விழாவில், முதல்வர் விஜயும் பங்கேற்றார். இருவரும் சென்னை விமான நிலையத்தில் தனியாக, 30 நிமிடங்கள் பேசியுள்ளனர். அப்போது, மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்பட்டால் ஏற்படும் வளர்ச்சியை, ஆந்திராவுக்கு சென்று பார்க்கும்படி, விஜயிடம் தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாகவே, அவர் ஆந்திரா சென்று, அம்மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடுவை சந்தித்து பேசியதாக தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து, அரசு வட்டாரங்கள் கூறியதாவது:

தமிழகத்தில், கடந்த திமுக அரசானது, மத்திய அரசுடன் தொடர்ந்து விரோத போக்கை கடைபிடித்தது. இதனால், கல்வி, நகர்ப்புற உள்கட்டமைப்பு, இரண்டாம் கட்டட நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்கள், நெடுஞ்சாலை உள்ளிட்ட புதிய திட்டங்களை செயல்படுத்த, மத்திய அரசு நிதியுதவி பெற முடியாத நிலை ஏற்பட்டது.

மேலும், 'தமிழகத்திற்கு நிதி ஒதுக்காமல், மத்திய அரசு வஞ்சிக்கிறது' என, கடந்த ஆட்சியாளர்கள் குற்றம் சாட்டினர். இதனால், தமிழகத்தில் பல துறைகளின் செயலர்களாக இருந்த, மூத்த ஐஏஎஸ் அதிகாரிகளால் டில்லி சென்று, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், செயலர்களை தொடர்ந்து சந்தித்து, அதிக நிதி ஒதுக்கீடு, புதிய திட்டங்களை பெற முடியவில்லை.

தமிழகத்தில், முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அமைச்சரவையில் காங்கிரஸ் இடம் பெற்று இருந்தாலும், மத்திய அரசு மீது அவசியமில்லாமல் குற்றம் சாட்டுவதில்லை.



சென்னையில் பிரதமர் மோடியை சந்தித்த நிலையில், முதல்வர் விஜய் கடந்த வாரம் ஆந்திர மாநிலம் விஜயவாடா சென்றார். அங்குள்ள கனகதுர்க்கை அம்மன் கோவில் தரிசனம் செய்த விஜய், அம்மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு வீட்டிற்கு சென்றார்.

இச்சந்திப்பு, ஒன்றரை மணி நேரம் நடந்தது. அப்போது, கோதாவரி - கிருஷ்ணா - காவிரி நீர் இணைப்பு திட்டம் பேசப்பட்டது. ஆந்திராவில் இருந்து தமிழகத்திற்கு முறைப்படி நீரை திறப்பது தொடர்பாக, விஜய் வலியுறுத்தினார்.

பின், மத்திய அரசுடன் இணைந்து செயல்படுவதால், ஆந்திராவில், மத்திய அரசின் நிதி மற்றும் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களை, சந்திரபாபு பட்டியலிட்டுள்ளார். அமராவதியில், 58,000 கோடி ரூபாய் உள்கட்டமைப்பு திட்டங்கள்; கோதாவரி நீர்பாசன திட்டத்தை உள்ளடக்கிய போலாவரம் தேசிய நீர்ப்பாசன திட்டம்; 10,134 கோடி ரூபாய் மதிப்பில் புதிய ரயில் பாதைகள், இரட்டை பாதைகள், 74 ரயில் நிலைய திட்டங்கள், குப்பம் உள்ளிட்ட நகரங்களில் அமைக்கப்பட உள்ள புதிய விமான நிலையங்கள் போன்றவற்றை, முதல்வர் விஜயிடம், சந்திரபாபு நாயுடு விரிவாக தெரிவித்துள்ளார்.

இதேபோல, தமிழக அரசும் மத்திய அரசுடன் இணைந்து செயல்பட்டால், பல திட்டங்கள் உங்கள் மாநிலத்திற்கு கிடைக்கும் என்றும் ஆலோசனை வழங்கியதாக தெரிகிறது. எனவே, தமிழகத்தில் ஒவ்வொரு துறைக்கும் மத்திய அரசிடம் இருந்து வர வேண்டிய நிதி, புதிய திட்டங்களை பெறுவதற்கான தயாரிப்பு பணிகளில், அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு அரசு வட்டாரங்கள் கூறின.

## தேனிசைத் தென்றல் தேவா சென்னையில் காலமானார்: தலைவர்கள் இரங்கல்

சென்னை, 18 அக்டோபர் 2026: தேனிசை தென்றல் மறைவுக்கு தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு ஆளுநர் அர்லேகர் வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில்; பிரபல இசையமைப்பாளர் தேவா அவர்களின் மறைவுக்கு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். தனது இனிமையான இசையமைப்பாலும், மறக்க முடியாத பாடல்களாலும் தமிழ் திரையிசை உலகில் தனித்துவமான இடத்தைப் பெற்ற தேவா அவர்களின் மறைவு, தமிழ் திரையுலகிற்கும் இசை உலகிற்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினர், திரையுலகினர் மற்றும் இசை ரசிகர்கள் அனைவருக்கும் ஆளுநர் அவர்கள் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறார். அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறார்.

முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக்குறிப்பில்; தமிழ்த் திரையுலகின் தனித்துவமான இசையமைப்பாளரும், கானா பாடல்களால் எளிய மக்களின் மனங்களைக் கவர்ந்தவருமான 'தேனிசைத் தென்றல்' திரு.தேவா அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும், ஆழ்ந்த வேதனையும் அடைந்தேன். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் 400-க்கும் மேற்பட்ட திரைப் படங்களுக்கு இசையமைத்ததோடு, பல கானா பாடல்களை எழுதி, அவரே பாடியும் உள்ளார். கலைமாமணி உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்ற தேவா அவர்களின் இசைப் பயணமும், பாடல்களும் திரையிசை வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும். அவரது மறைவு தமிழ்த் திரையுலகிற்கு பேரிழப்பாகும். இசையமைப்பாளர் தேவா அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், திரைத்துறையினருக்கும்



இசை ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில்; தேனிசைத் தென்றல் தேவா அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சிக்குள்ளானேன். பொறாமை, வஞ்சகம், சூது வாது ஏதுமறியாத வெள்ளை மனம் கொண்டவர் தேவா. கானா வகைமைப் பாடல்களைத் திரையிசையில் பெரிய அளவில் புகுத்தி, கானா என்றாலே தேவாதான் என அறியப்பட்டவர். எளிமையான கிராமத்துப் பின்னணியில் இருந்து சென்னைக்கு வந்து, தென்னிந்தியத் திரையுலகின் முன்னணி இசையமைப்பாளராக உயர்ந்து எத்தனையோ பேருக்கு ஆதர்சமாகத் திகழ்ந்தவர். உச்ச நட்சத்திரங்கள் அனைவரது திரைப்படங்களுக்கும் இசையமைத்து, அவற்றின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர்.

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள பதிவில்; பிரபல இசையமைப்பாளர் அன்புச் சகோதரர் “தேனிசைத் தென்றல்” தேவா அவர்கள் உடல் நலக்குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். எளிய பின்னணியில் இருந்து வந்து, எளிய மக்களின் வாழ்வியலை தன் இசையால் பிரதிபலித்தவர் தேவா அவர்கள். Mass, Melody, Devotion என அனைத்து வகையான பாடல்களிலும் தனி முத்திரை பதித்தவர். தேவா அவர்களின் “கானா” பாடல்களுக்கு துள்ளாத கால்கள் இல்லை என்று சொல்லும் அளவிற்கு அனைவரின் உள்ளங்களிலும் நிறைந்திருக்கிறது அவருடைய இசை என்று குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியாவின் விண்வெளிப் பொருளாதாரம் அடுத்த 8 ஆண்டுகளில் 45 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும்: மத்திய இணையமைச்சர் ஜிதேந்திர சிங்

சென்னை 18, அக்டோபர் 2026: தற்போது சுமார் 9 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள இந்தியாவின் விண்வெளிப் பொருளாதாரம், அடுத்த ஏழு முதல் எட்டு ஆண்டுகளில் 40 முதல் 45 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டும் என்று விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புது தில்லியில் புளூம்பெர்க் புதிய பொருளாதார மன்றக் கூட்டத்தில் பேசிய அவர், இந்தியா தனது தொழில்நுட்பத் திறன்களை வெளிப்படுத்துவதைத் தாண்டி, உலக அளவில் போட்டித் தன்மை வாய்ந்த வர்த்தக விண்வெளி நிறுவனங்களைக் கட்டமைப்பதாக கூறினார். இந்திய நிறுவனங்களை மேம்படுத்துவதற்கும், உலகச் சந்தைகளில் அவற்றின் இருப்பை விரிவாக்குவதற்கும், அதிக முதலீடு, விரைவான ஒழுங்குமுறை ஒப்புதல்கள் ஆகியவை இன்றியமையாதவை என்று அவர் வலியுறுத்தினார்.

பிரதமர் நரேந்திர மோடியின் யூலைமையில் 2019-2020-ல் இந்தியாவின் விண்வெளித் துறை தனியார் பங்கேற்புக்கு அனுமதிக்கப்பட்டதன் விளைவாக, வெறும் ஐந்து முதல் ஆறு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க பலன்கள் கிடைத்துள்ளன என்று அமைச்சர் கூறினார். கணிசமான தொழில்நுட்ப நிபுணத்துவம், முதலீடு, நீண்ட கால அர்ப்பணிப்பு தேவைப்படும் ஒரு துறையில், அரசு நிறுவனங்களையும் தனியார் தொழில்துறையையும் ஒன்றிணைப்பதன் ஆற்றலை இந்தியாவின் அனுபவம் நிரூபிக்கிறது என்று டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

## ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்துவரும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கான கூடுதல் வரிவிதிப்பு முடிவு நிறுத்தி வைப்பு: அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பு

சென்னை 18, அக்டோபர் 2026: ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகள் மீதான கூடுதல் வரிகள் மற்றும் பொருளாதாரத் தடைகளை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அதிரடியாக நிறுத்தி வைத்துள்ளார். உக்ரைன் மீதான ரஷ்யாவின் போருக்கான நிதி ஆதாரங்களை முடக்கும் நோக்கில், வாஷிங்டனில் மறைந்த செனட்டர் லிண்ட்சே கிரஹாம் பெயரிலான புதிய பொருளாதாரத் தடை மசோதா அமெரிக்க நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் மற்றும் காஸ் வாங்கும் நாடுகள் மீது 100 சதவீதம் வரை அபராத வரி விதிக்க இந்தச் சட்டம் வகை செய்தது.

இதனால் ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்து வரும் இந்தியா, சீனா உள்ளிட்ட 10 நாடுகளுக்கு கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்படும் சூழல் உருவானது. ஏற்கெனவே இந்தியாவில் இருந்து செல்லும் பொருட்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள 10 சதவீத வரியுடன், இந்த கூடுதல் வரியும் சேர்ந்தால் வர்த்தகம் கடுமையாகப் பாதிக்கப்படும் அபாயம் எழுந்தது. இந்தச் சூழலில், புதிய கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வருவதற்கு ஒரு நாளுக்கு முன்பாக வரிகள் மற்றும் பொருளாதாரத் தடைகளை நிறுத்தி வைத்து அமெரிக்க அதிபர் டிரம்ப் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதுகுறித்து அதிபர் டிரம்ப் பிறப்பித்துள்ள உத்தரவில், ‘கிரஹாம் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட வரிகள், தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கிறேன். அமெரிக்க நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டே இந்தத் தளர்வு வழங்கப்படுகிறது என்பதை நாடாளுமன்றத்திற்கு முறைப்படி தெரிவித்துள்ளேன்’ என்று குறிப்பிட்டுள்ளார். அதிபர் டிரம்பின் இந்த அதிரடி முடிவால் இந்தியா மற்றும் சீனாவிற்கு மிகப்பெரிய வர்த்தக நிம்மதி கிடைத்துள்ளதோடு, சர்வதேச கச்சா எண்ணெய் சந்தையில் நிலவி வந்த நிச்சயமற்ற சூழலும் முடிவுக்கு வந்துள்ளது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# சென்னையில் 'சினர்ஜி 2026' தொழில் கண்காட்சி மற்றும் விருது விழாவை நடத்திய பிஎன்ஐ சென்னை சிபிடி பி

சென்னை 18, அக்டோபர் 2026: பிசினஸ் நெட்வொர்க் இன்டர்நேஷனல் (பிஎன்ஐ) அமைப்பின் சென்னை சிபிடி பி பிரிவு சார்பில், அதன் முக்கிய வணிகத் தொடர்பு நிகழ்வான 'சினர்ஜி 2026' தொழில் கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழா, சென்னை வர்த்தக மையத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. தமிழகம் முழுவதிலுமிருந்து தொழில்முனைவோர், வணிக உரிமையாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் பங்கேற்ற இந்நிகழ்வில், தமிழ்நாடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை அமைச்சர் திரு. ஏ. ஸ்ரீநாத் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.



"வணிகமும் வாய்ப்புகளும் சந்திக்கும் இடம்" என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிஎன்ஐ அமைப்பின் 23 பிரிவுகளைச் சேர்ந்த 1,200-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பங்கேற்றனர். 100-க்கும் மேற்பட்ட கண்காட்சி அரங்குகளில் பல்வேறு நிறுவனங்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் காட்சிப்படுத்தப்பட்டன. வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல், கூட்டுத் தொழில் வாய்ப்புகளை ஆராய்தல் மற்றும் வணிகக் கூட்டாண்மைகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்கு இந்நிகழ்வு வாய்ப்பளித்தது. அறிவுப் பகிர்வு அமர்வுகளும், பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களுடனான வணிகத் தொடர்புகளும் நிகழ்வின் முக்கிய அம்சங்களாக அமைந்தன.

பிஎன்ஐ சென்னை சிபிடி பி பிரிவின் மண்டல இயக்குநரும், பிஎன்ஐ சென்னை தென் பிரிவின் செயல் இயக்குநருமான திரு. அஜீத் நஹார் கூறுகையில், "புதிய வாய்ப்புகளைக் கண்டறியவும், அர்த்தமுள்ள உறவுகளை உருவாக்கவும், நீடித்த வணிகக் கூட்டாண்மைகளை ஏற்படுத்தவும் பல்வேறு நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் தளமாக 'சினர்ஜி 2026' அமைந்துள்ளது. தொழில்முறைத் தொடர்புகளை நேரடியான வணிக வாய்ப்புகளாகவும், நிலையான வளர்ச்சியாகவும் மாற்றுவதே எங்களது நோக்கம்" என்றார்.

பிஎன்ஐ சென்னை சிபிடி பி மற்றும் தென் மண்டலத்தின் செயல் இயக்குநர் பட்டயக் கணக்காளர் சி.ஏ. சுனில் சேத்தியா கூறுகையில், "நம்பிக்கையின் அடிப்படையிலான உறவுகள் மற்றும் 'கொடுத்து வெல்வோம்' என்ற கொள்கையின் மூலம் உறுப்பினர்கள் தங்களது வணிகத்தை வளர்த்துக் கொள்ள உதவுவதே பிஎன்ஐ அமைப்பின் நோக்கம். ஒத்துழைப்பை ஊக்குவித்தல், வணிகத் தொடர்புகளை விரிவுபடுத்துதல் மற்றும் நீண்டகால வெற்றிக்கான வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் தமிழகத்தின் தொழில் முனைவுச் சூழலை வலுப்படுத்த நாங்கள் முனைப்புடன் செயல்படுகிறோம்" என்றார்.

ஏற்பாட்டாளர்கள் தெரிவித்த தகவல்களின்படி, பிஎன்ஐ சென்னை சிபிடி பி மற்றும் தென் மண்டல வலையமைப்பில் உறுப்பினர்களுக்கிடையிலான வணிகப் பரிந்துரைகள் மூலம் ரூ.6,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான உறுதிப்படுத்தப்பட்ட வணிகம் உருவாகியுள்ளது. இது உறவுகளின் அடிப்படையிலான வணிகத் தொடர்புகளின் தாக்கத்தை எடுத்துக்காட்டுகிறது.

1985-ஆம் ஆண்டு அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் தொடங்கப்பட்ட பிஎன்ஐ அமைப்பு, உலகம் முழுவதும் 77 நாடுகளில் 3,55,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இந்தியாவில் 1,559 கிளைகளில் 75,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்.

'சினர்ஜி 2026' நிகழ்வின் மூலம், வணிக ஒத்துழைப்பு, தொழில் முனைவு மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதில் தனது உறுதிப்பாட்டை பிஎன்ஐ சென்னை சிபிடி பி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

# நடுக்கடலில் 2 சரக்கு கப்பல்கள் மீது தாக்குதல்; 24 இந்திய மாலுமிகள் பத்திரமாக மீட்பு: ஒன்றிய அமைச்சர் தகவல்

சென்னை 18, அக்டோபர் 2026: ஹார்முஸ் மற்றும் ருமேனிய கடற்பகுதியில் தாக்கப்பட்ட சரக்குக் கப்பல்களில் இருந்த 24 இந்திய மாலுமிகளும் பாதுகாப்பாக இருப்பதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

மேற்கு ஆசியப் பகுதியில் நிலவி வரும் போர் பதற்றத் திற்கு மத்தியில், சர்வ தேசக் கடல் வழித் தடங்களில் பயணிக்கும் வர்த்தகக் கப்பல்கள் மீது அடுத்தடுத்து ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஏற்கனவே கடந்த 11ம் தேதி ஓமன் கடற்பகுதியில் நடந்த ட்ரோன் தாக்குதலில் இரண்டு இந்திய மாலுமிகள் மாயமான நிலையில், பிற கப்பல்களில் இருந்த ஊழியர்கள் நல்வாய்ப்பாக உயிர் தப்பினர்.



இந்த அபாயகரமான சூழலில், கடந்த 16ம் தேதி ஹார்முஸ் ஜலசந்தி கடற்பகுதியில் 15 இந்திய மாலுமிகளுடன் சென்ற எம்.டி. எஸ்.டி 3 என்ற கச்சா எண்ணெய் கப்பல் மீதும், அதற்கு முன்னதாக 14ம் தேதி ருமேனியாவின் சுலினா பகுதியில் 9 இந்திய மாலுமிகளுடன் நங்கூரமிட்டிருந்த 'யாரா ஜே' என்ற ரசாயன கப்பல் மீதும் அடுத்தடுத்து வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்த விபத்துகள் குறித்து ஒன்றிய துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்பானந்த சோனாவால் வெளியிட்டுள்ள பதிவில், 'அதிர்ஷ்டவசமாக இரண்டு கப்பல்களிலும் இருந்த 24 இந்திய மாலுமிகளும் எவ்வித காயங்களுமின்றி முழுப் பாதுகாப்போடு உள்ளனர்' என்று தெரிவித்துள்ளார். இதற்கிடையே வர்த்தகக் கப்பல்கள் மற்றும் கடல்சார் ஊழியர்கள் மீதான இத்தகைய சட்டவிரோதத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும், மாலுமிகளின் உயிர்ப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலில் இந்தியா கண்டனம் பதிவு செய்துள்ளது.

# இந்தியாவில் புதிய ஆடி க்யூ3 அறிமுகம்: தொடக்க விலை ரூ.51.99 லட்சம்

மதுரை 18, அக்டோபர் 2026: ஜெர்மனியைச் சேர்ந்த சொகுசு கார் தயாரிப்பு நிறுவனமான ஆடி, தனது புதிய க்யூ3 (ஆடி க்யூ3) காரை இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது. இக்காரின் அறிமுக விலை ரூ.51,99,000 (காட்சியக விலையைத் தவிர). மகாராஷ்டிர மாநிலம் சத்ரபதி சம்பாஜிநகரில் உள்ள எஸ்ஏவிடபிள்யூஐபிஎல் ஆலையில் இந்தியாவிலேயே தயாரிக்கப்படும் இந்தச் சிறிய ரக சொகுசுக் கார், சிறந்த செயல்திறன், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் கூடுதல் வசதிகளை ஒருங்கே கொண்டுள்ளது.

புதிய ஆடி க்யூ3 கார் 150 கிலோவாட் திறனை வழங்குவதுடன், நான்கு சக்கரங்களுக்கும் ஒரே நேரத்தில் ஆற்றலைப் பகிர்ந்தளிக்கும் குவாட்ரோ இயக்கத் தொழில்நுட்பத்தையும் கொண்டுள்ளது. இதன் உட்புறத்தில் அகலமான மின்னணுத் திரை அமைப்பு, ஓட்டுநரின் பார்வைக்கு நேரடியாகத் தகவல்களைக் காட்டும் தலைக்கு முன்னால் அமைந்த காட்சித்திரை மற்றும் சோனோஸ் உயர்தர ஒலியமைப்பு ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இந்தக் காரில் நுண் எல்இடி தொழில்நுட்பத்துடன் கூடிய டிஜிட்டல் மேட்ரிக்ஸ் எல்இடி முகப்பு விளக்குகள், நான்கு வகைகளில் தேர்வு செய்யக்கூடிய பகல்நேர ஓட்ட விளக்குகள் மற்றும் மூன்று விதமான மாறும் ஒளி அமைப்புகள் உள்ளன. பின்புறத்தில் ஒளிரும் ஆடி சின்னங்கள் தனித்துவமான தோற்றத்தை அளிக்கின்றன.

ஓட்டுநரை மையமாகக் கொண்ட மின்னணு இடைமுகம், வாகனத் தகவல்கள், கட்டுப்பாடுகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஒருங்கிணைக்கிறது. கியர் மாற்றம், விளக்குகள், கண்ணாடித் துடைப்பான்கள் உள்ளிட்டவற்றை




எளிதாகக் கட்டுப்படுத்தும் புதிய சுவிட்ச் அமைப்பும் இதில் இடம்பெற்றுள்ளது.

அறிமுகம் குறித்து ஆடி ஏஜி நிறுவனத்தின் வெளிநாட்டு விற்பனைப் பிரிவின் மூத்த இயக்குநர் விக்டோரியா காஃப் மேன்-ரீசர் கூறுகையில், இந்தியாவில் வளர்ந்து வரும் சொகுசுக் கார் சந்தையும், வாடிக்கையாளர்களின் அதிகரித்து வரும் எதிர்பார்ப்புகளும் இந்நாட்டின் முக்கியத்துவத்தை உயர்த்துவதாகத் தெரிவித்தார்.

எஸ்ஏவிடபிள்யூஐபிஎல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் தலைமைச் செயல் அதிகாரியுமான பியூஷ் அரோரா, இந்தியாவில் இந்தக் கார் தயாரிக்கப்படுவது நாட்டின் உற்பத்தி மற்றும் பொறியியல் திறன்களை எடுத்துக்காட்டுவதாகக் குறிப்பிட்டார்.

ஆடி இந்தியாவின் பிராண்ட் இயக்குநர் பல்பீர் சிங் தில்லான் கூறுகையில், புதிய க்யூ3 கார் செயல்திறன், அன்றாடப் பயன்பாட்டுக்கான வசதி, நவீனத் தொழில்நுட்பம் மற்றும் மேம்பட்ட சொகுசு அம்சங்களை ஒருங்கிணைப்பதாகத் தெரிவித்தார்.

நவீன வடிவமைப்பு, மேம்பட்ட மின்னணுத் தொழில்நுட்பம் மற்றும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படும் சிறப்பு ஆகியவற்றின் மூலம், இந்திய சொகுசுக் கார் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதில் ஆடி நிறுவனம் தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

# தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறி: பிரேமலதா குற்றச்சாட்டு

சென்னை 18, அக்டோபர் 2026: தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகி உள்ளது என பிரேமலதா விஜயகாந்த் குற்றம்சாட்டியுள்ளார்.

தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், மதுரை விமான நிலையத்தில் நிருபர்களிடம் இன்று கூறியதாவது: தமிழகம் முழுவதும் மின்வெட்டு பிரச்னை உள்ளது. குறிப்பாக சென்னையில் அதிக மாக உள்ளது. வெளிச் சந்தையில் 1 யூனிட் மின்சாரம் ரூ.35 வாங்கினால் மக்கள் தான் அதிகம் பாதிக்கப்படுவர். அதிமுக எம்எல்ஏக்களிடம் நடக்கும் குதிரை பேரம் குறித்து சட்டமன்றத்தில் பேசியுள்ளேன். ஜெம் வீரமணி வழக்கில் விவகாரம் அதிர்ச்சி அளிக்கிறது. விலைவாசி உயர்வால் ஏழை மக்கள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஒரு கிலோ அரிசி ரூ.100 வரை சென்றுள்ளது.

விலைவாசி உயர்வை அரசு கட்டுப்படுத்த வேண்டும். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகி உள்ளது. பட்டப் பகலில் பாலியல் வன்கொடுமை, கொலைகள் நடக்கின்றன. முதல்வர் வசம் உள்ள காவல் துறையின் செயல்பாடு குறித்து சட்டசபையில் பேசியும் பதில் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## போதைப்பொருள் இல்லாத, வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க இளைஞர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் - மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா

சென்னை 18, அக்டோபர் 2026: மத்திய இளைஞர் விவகாரங்கள், விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, தேசத்தைக் கட்டமைப்பதில் இளைஞர்கள் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். குஜராத்தின் போர்பந்தர் மாவட்டத்தில் உள்ள குட்டியானாவில் இன்று (17 அக்டோபர் 2026) நடைபெற்ற வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இளையோர் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், வளர்ச்சியடைந்த, போதைப் பொருள் இல்லாத இந்தியாவைக் கட்டமைப்பதில் இளைஞர்களின் பொறுப்புகள், கூட்டு நடவடிக்கை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். 2047-ல் இந்தியாவின் சுதந்திர நூற்றாண்டு விழாவை நோக்கிய அமிர்த காலத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த டாக்டர் மாண்டவியா, வளர்ச்சியடைந்த, தற்சார்பு இந்தியாவை நனவாக்க மக்களின் கூட்டு அர்ப்பணிப்பு அவசியம் என்று கூறினார்.

செங்கோட்டையிலிருந்து பிரதமர் திரு நரேந்திர மோடி எடுத்துரைத்த ஐந்து உறுதிமொழிகளை குறிப்பிட்ட அமைச்சர், அவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# இந்த தீபாவளிக்கு ‘பிக், பிக்கர், பிக்கஸ்ட்’ சிறப்புச் சலுகைகளை அறிவித்தது சாம்சங்




கோயம்புத்தூர் 18, அக்டோபர் 2026: இந்த தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, சாம்சங் இந்தியா தனது விஷன் ஏஐ தொழில்நுட்பத்துடன் கூடிய பெரிய திரை தொலைக்காட்சிகளுக்கு ‘பிக், பிக்கர், பிக்கஸ்ட்’ என்ற பெயரில் சிறப்புச் சலுகைகளை அறிவித்துள்ளது.

இதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட சாம்சங் தொலைக்காட்சிகளை வாங்கும் வாடிக்கையாளர்கள் அதிகபட்சமாக ரூ.1,10,990 மதிப்புள்ள சாம்சங் சவுண்ட்பாரையோ அல்லது ரூ.1,59,990 மதிப்புள்ள சாம்சங் விஷன் ஏஐ தொலைக்காட்சியையோ இலவசமாகப் பெறலாம். மேலும், 20% வரை கேஷ்பேக், முன்பணம் செலுத்தத் தேவையில்லாத வசதி மற்றும் மூன்று ஆண்டுகளுக்கான விரிவான உத்தரவாதமும் வழங்கப்படுகிறது.

நகராட்சி எல்லைக்குள் வசிக்கும் தகுதியுள்ள வாடிக்கையாளர்கள், நிறுவல் கோரிக்கையைப் பதிவு செய்த நான்கு மணி நேரத்திற்குள் தொலைக்காட்சியை நிறுவும் வசதியையும் பெறலாம். இதற்குப் பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் நடைமுறையில் இருக்கும்.

சாம்சங்கின் விஷன் ஏஐ தொலைக்காட்சிகள் மேம்பட்ட படத்தரம், ஒலி அனுபவம், தனிப்பயனாக்கப்பட்ட பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் ஸ்மார்ட் திங்க்ஸ் இணைப்புத் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளன. 32 அங்குலம் முதல் 115 அங்குலம் வரையிலான திரை அளவுகளில் கிடைக்கும் இந்தத் தொலைக்காட்சிகளுடன் சாம்சங் டிவி ப்ளஸ், சாம்சங் கேர்+, சாம்சங் ஆர்ட்+, சாம்சங் சவுண்ட்+, சாம்சங் பைனான்ஸ் + உள்ளிட்ட பல்வேறு வசதிகளும், தகுதியுள்ள மாடல்களுக்கு ஏழு ஆண்டுகள் வரை இயங்குதள மேம்படுத்தல்களும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் வீட்டிலேயே சிறந்த பொழுதுபோக்கு அனுபவத்தைப் பெறலாம்.

# நெஞ்சு சளி தொற்று காரணமாக பாஜக மூத்த தலைவர் அத்வானி மருத்துவமனையில் அனுமதி



சென்னை 18, அக்டோபர் 2026: பாஜக மூத்த தலைவரும் முன்னாள் துணைப் பிரதமருமான எல்.கே.அத்வானி, நெஞ்சு சளி தொற்று காரணமாக டெல்லி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பாஜக மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் துணை பிரதமருமான எல்.கே.அத்வானி (98), தற்போது வயது மூப்பின் காரணமாக டெல்லியில் அவரது வீட்டில் ஓய்வில் இருந்து வருகிறார். கடந்த 1927ம் ஆண்டு நவம்பர் 8ம் தேதி பிறந்த அத்வானி, கடந்த சில மாதங்களாக வயது முதிர்வு சார்ந்த பல்வேறு உபாதைகளால் அவதிப்பட்டு வருகிறார்.

ஏற்கனவே கடந்த 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பிய இவர், நடப்பு ஆண்டு மே மாதத்திலும் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்றுத் திரும்பினார். இந்த நிலையில், அத்வானிக்கு திடீரென நெஞ்சு சளி தொற்று பாதிப்பு ஏற்பட்டது. இதை யடுத்து அவர் டெல்லியில் உள்ள இந்திர பிரஸ்தா அப்பல்லோ மருத்துவமனையில் நேற்று இரவு சுமார் 7.30 மணி அளவில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்குள்ள நுரையீரல் சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள அவருக்கு, சிறப்பு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

அவரது உடல்நிலை குறித்து மருத்துவமனை வட்டாரங்கள் வெளியிட்டுள்ள தகவலில், ‘அத்வானியின் உடல் நிலை தற்போது சீராக உள்ளது; மருத்துவப் பரிசோதனைகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், மருத்துவ குழுவினர் அவரது உடல்நிலையைத் தொடர்ந்து தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மூத்த தலைவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தகவல் அறிந்து அரசியல் பிரமுகர்கள் பலரும் அவர் விரைவில் பூரண குணமடைய வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில், இந்திய பயிற்சிப் படைப்பிரிவு செஷல்ஸில் பயிற்சியை நிறைவு செய்து புறப்பட்டது



சென்னை 18, அக்டோபர் 2026: இந்தியக் கடற்படையின் முதல் பயிற்சிப் படைப்பிரிவின் கப்பல்களான ஐஎன்எஸ் திர், ஐஎன்எஸ் சுஜாதா, இந்தியக் கடலோரக் காவல் படை கப்பலான சாரதி ஆகியவை, கடல்சார் பயிற்சியின் ஒரு பகுதியாக செஷல்ஸ் சென்றன.

இந்தக் கப்பல்கள், 12 அக்டோபர் 2026 அன்று தொடங்கிய தங்களது பயணத்தை, 15 அக்டோபர் 2026 அன்று நிறைவு செய்து, செஷல்ஸில் உள்ள விக்டோரியா துறைமுகத்திலிருந்து புறப்பட்டன.

இந்தப் பயணம் தொழில் முறைப் பயிற்சி, திறன் மேம்பாடு, அந்நாட்டு கடற்படையினருடனான கலந்துரையாடல்கள் ஆகியவை மூலம், இந்தியா-செஷல்ஸ் இடையேயான நீண்ட காலக் ஒத்துழைப்பை வலுப்படுத்தியது. துறைமுக பயணத்தின் போது, இந்திய பயிற்சிப் படைப்பிரிவின் மூத்த அதிகாரியும், கப்பல்களின் கட்டளை அதிகாரிகளும், செஷல்ஸ் பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதியான மேஜர் ஜெனரல் மைக்கேல் ரோசெட்டைச் சந்தித்தனர். இரு படைகளுக்கும் இடையிலான நீடித்த ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடல்கள் இடம் பெற்றன.

# டி. இமான் இசையமைப்பில் தந்தை- மகள் பாசத்தை பேசும் ‘சிக்னல் அட் 11.30’ திரைப்படத்தின் ‘ஜோ ஜோ மா’ பாடல்!



சென்னை 18, அக்டோபர் 2026: அலர் ஸ்டுடியோஸ் தயாரிப்பில், மலர்விழி நடேசன் எழுதி இயக்கியுள்ள ‘சிக்னல் அட் 11.30’ திரைப்படத்திலிருந்து, தந்தை - மகள் பாசத்தை அழகாகப் பேசும் பாடலான ‘ஜோ ஜோ மா’ வெளியாகியுள்ளது. தேசிய விருது பெற்ற இசையமைப்பாளர் டி. இமான் இசையமைத்துள்ள இப்பாடலை ஹரிசரண் பாடியுள்ளார். பாடலாசிரியர் மோகன்ராஜன் பாடல் வரிகளை எழுதியுள்ளார்.

பெற்றோரின் அன்பையும், வார்த்தைகளால் விவரிக்க முடியாத பந்தத்தையும் இசையின் மூலம் வெளிப்படுத்தும் இப்பாடல், கேட்பவர்களின் மனதை நெகிழ செய்யும்.

தந்தை- மகள் பாசத்தை பேசும் ‘விஸ்வாசம்’ படத்தின் ‘கண்ணான கண்ணே’ பாடல், திரையில் இடம்பெற்ற ஒரு பாடலாக மட்டுமல்லாமல், மக்களின் வாழ்க்கையோடும் உணர்வுகளோடும் கலந்த ஒரு பாடலாக இன்றளவும் கொண்டாடப்படுகிறது.

அதேபோன்ற உணர்வுப்பூர்வமான பாடலாக ‘ஜோ ஜோ மா’ பாடலை டி. இமான் உருவாக்கியுள்ளார். ஹரிசரணின் உணர்வுப்பூர்வமான குரலும் மோகன்ராஜனின் வரிகளும் இப்பாடலுக்கு மேலும் வலு சேர்த்துள்ளது. இந்த பாடல் படம் மீதான எதிர்பார்ப்பையும் அதிகரித்துள்ளது.

சந்தோஷ் பிரதாப், பவ்யா திரிகா, புஜிதா பொன்னாடா, ஜெயப்பிரகாஷ், முனிஷ்காந்த் மற்றும் ஆர்யன் ஆகியோர் இப்படத்தில் நடித்துள்ளனர். அலர் ஸ்டுடியோஸ் சார்பில் மலர்விழி நடேசன் மற்றும் ஷிவானி சுப்பிரமணி இப்படத்தைத் தயாரித்துள்ளனர். ஏ.கே. நாகராஜன் நிர்வாகத் தயாரிப்பாளராகப் பணியாற்றியுள்ளார்.

இப்படத்தின் தொழில்நுட்பக் குழுவில் ஒளிப்பதிவாளர் ராஜா பட்டாச்சார்ஜி, படத்தொகுப்பாளர் ஆர். கலைவாணன் மற்றும் கலை இயக்குநர் முனி கிருஷ்ணன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# ரோஸ்டர்... பறக்கும் காரை அறிமுகப்படுத்தியது அமெரிக்காவின் டெஸ்லா நிறுவனம்



சென்னை 18, அக்டோபர் 2026: அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்க், தன் 'டெஸ்லா' நிறுவனம் சார்பில், 'ரோட்ஸ்டர்' என்ற பெயரில் குறுகிய தூரம் பறக்கும் திறன் உடைய காரை நேற்று அறிமுகப்படுத்தினார்.

அமெரிக்காவை சேர்ந்த தொழிலதிபர் எலான் மஸ்க்கின், 'டெஸ்லா' நிறுவனம், மின்சார கார்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறது. அந்த வரிசையில், பறக்கும் திறன் உடைய, 'ரோட்ஸ்டர்' என்ற புதிய காரை நேற்று அறிமுகப்படுத்தியது. இந்தக் கார் சாலையில் அதிவேகமாகச் செல்வதுடன், காற்றிலும் மேலே எழும்பும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் உற்பத்தி 2028ல் தொடங்கும் என நிறுவனத்தின் தலைமைச் நிர்வாக அதிகாரி எலான் மஸ்க் தெரிவித்தார்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம், ஆஸ்டினில் உள்ள, 'ஸ்பேஸ்எக்ஸ்' சோதனை மையத்தில், 'ரோட்ஸ்டர்' பறக்கும் காரின் அறிமுக நிகழ்ச்சி நேற்று நடந்தது. அப்போது காரின் செயல் விளக்கமும் நடந்தது. இதற்காக செங்குத்தாக மேலே சென்று உட்புறமாக திரும்பும் வகையில் பாதை அமைத்திருந்தனர். காரின் அடிப் பகுதியில் உறிஞ்சு விசை தொழில்நுட்பம் இருந்ததால் செங்குத்தான பாதையில் ஏறி கீழே விழாமல் தலைகீழாக சில விநாடிகள் நின்றது.

பின்னர் அந்தரத்தில் சுழன்று காற்றில் சில விநாடிகள் பறந்து, அதிவேக காற்று உந்து விசை உதவியுடன் தரையிறங்கியது. இந்தச் செயல்விளக்கத்தில் காருக்குள் ஓட்டுநர் இல்லை. உயிரிழப்பு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக ஓட்டுநர் இல்லாமல் சோதனை நடத்தியதாக மஸ்க் கூறினார்.

இருப்பினும், இந்தக் கார் நீண்ட தூரம் தொடர்ந்து பறக்கும் திறன் கொண்டது என்பதற்கான ஆதாரங்கள் இன்னும் வெளியாகவில்லை. நிகழ்ச்சியில் காட்டப்பட்ட செயல்விளக்கம், கார் காற்றில் மேலே எழும்பி பாய்வதை மட்டுமே வெளிப்படுத்தியுள்ளது.

'ரோஸ்டர்' கார் குறித்து டெஸ்லா நிறுவன தலைவர் எலான் மஸ்க் கூறியதாவது: 'டெஸ்லா'வின் புதிய 'ரோட்ஸ்டர்' கார், பூஜ்ஜியத்தில் இருந்து 100 கி.மீ., வேகத்தை ஒரு விநாடிக்கும் குறைவான நேரத்தில் எட்டும் திறன் கொண்டது. இந்தக் காரில் 10 உந்து முனைகளும், மிக உயர் அழுத்த காற்றழுத்த தொட்டிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இவை தரையில் காரின் வேகத்தை அதிகரிக்கவும், காற்றில் மேலே எழும்பவும் உதவும்.

உலகின் சிறந்த கார் தயாரிப்பு நிறுவனமும், சிறந்த ராக்கெட் தயாரிப்பு நிறுவனமும் இணைந்து செயல்பட்டதன் விளைவு இந்தத் தொழில்நுட்பம். 2028ல் இந்த காரை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## ‘ஒன்றா ரெண்டா’ - ஜிவிஎம்-இன் 25 ஆண்டுகள்’ கௌதம் வாசுதேவ் மேனனின் திரை இசையின் காலத்தால் அழியாத சிறப்பைக் கொண்டாடி, 5,000-க்கும் மேற்பட்ட ரசிகர்களுடன் கோலாலம்பூரை மயக்கியது:

சென்னை 18, அக்டோபர் 2026: இந்தியத் திரையுலகில் இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனனின் தனித்துவமான பங்களிப்பின் 25 சிறப்பு மிக்க ஆண்டுகளைக் கொண்டாடும் வகையில், ‘ஒன்றா ரெண்டா – ஜிவிஎம்-இன் 25 ஆண்டுகள்’ நிகழ்ச்சி, அக்டோபர் 10, 2026 அன்று மலேசியாவின் கோலாலம்பூரில் 5,000-க்கும் மேற்பட்ட ரசிகர்கள் உற்சாகமாகக் கலந்து கொண்ட பிரம்மாண்டமான நிகழ்வாக அமைந்தது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியின் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து, இந்த இசைத் திருவிழா இந்திய எல்லைகளைக் கடந்து பயணித்து, இயக்குநரின் திரைப்பயணச் சாதனைகளுக்கும் தலைமுறைகளாக ரசிகர்களின் மனதைத் தொட்ட பாடல்களுக்கும் மறக்க முடியாத அஞ்சலியாக அந்த மாலையை மாற்றியது.

கடந்த இரண்டரை தசாப்தங்களாக, நுட்பமான கதை சொல்லல், உறவுகளை உணர்வுபூர்வமாகச் சித்தரித்தல், மறக்க முடியாத கதாபாத்திரங்கள் மற்றும் தனித்துவமான காட்சியமைப்பு ஆகியவற்றின் மூலம் கௌதம் வாசுதேவ் மேனன் இந்தியத் திரையுலகில் தனக்கென ஒரு தனித்துவமான இடத்தை உருவாக்கியுள்ளார். அவரது படைப்பாற்றல் அடையாளத்தின் முக்கிய அங்கமாக அவரது திரைப்படங்களின் இசை அமைந்துள்ளது. மனதை வருடும் மெல்லிசைகள், காதல் பாடல்கள் மற்றும் உற்சாகமூட்டும் ஹிட் பாடல்கள் ஆகியவை எண்ணற்ற திரைப்பட ரசிகர்களின் உணர்வுகளுடனும் அனுபவங்களுடனும் பிரிக்க முடியாத வகையில் இணைந்துள்ளன.

முதல் காதலின் அப்பாவித்தனத்தையும் உற்சாகத்தையும் வெளிப்படுத்தும் பாடல்கள் முதல் ஏக்கம், இதயவலி,



நம்பிக்கை மற்றும் நினைவலைகளில் மூழ்கடிக்கும் மெல்லிசைகள் வரை, ஜிவிஎம்-இன் திரைப்படங்களுடன் தொடர்புடைய இசை திரையின் எல்லைகளைத் தொடர்ந்து கடந்து வந்துள்ளது. இந்தப் பாடல்கள் தலைமுறைகள் கடந்த ரசிகர்களின் தனிப்பட்ட நினைவுகள், உறவுகள் மற்றும் வாழ்க்கையின் முக்கியமான தருணங்களுக்கான பின்னணி இசையாக மாறியுள்ளன. இது அவரது திரைப்பட உருவாக்கத்திற்கும் இசைக்கும் இடையிலான நீடித்த பிணைப்பை மேலும் வலுப்படுத்துகிறது.

இந்த அசாதாரணமான பிணைப்பைக் கொண்டாடும் வகையில் உருவாக்கப்பட்ட ‘ஒன்றா ரெண்டா - ஜிவிஎம்-இன் 25 ஆண்டுகள்’, கோலாலம்பூரில் மேடையில் இயக்குநரின் இசை உலகத்தை உயிர்ப்பித்தது. ரசிகர்கள் தங்களுக்குப் பிரியமான பாடல்களை மீண்டும் கேட்டு மகிழவும், அவரது மறக்க முடியாத திரைப்படக் காட்சிகளுடன் தொடர்புடைய உணர்வுகளை மீண்டும் அனுபவிக்கவும் இந்த இசை நிகழ்ச்சி ஒரு வாய்ப்பை வழங்கியது. 5,000-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டது, ஜிவிஎம்-இன் திரைப்படங்கள் மீதான பரவலான அன்பையும், புவியியல் மற்றும் கலாச்சார எல்லைகளைக் கடந்து இன்றும் ரசிகர்களின் மனதில் ஒலித்துக் கொண்டிருக்கும் அவரது திரைப்பட இசையின் காலத்தால் அழியாத ஈர்ப்பையும் வெளிப்படுத்தியது.

## நடிகை கீர்த்தி சுரேஷ் பிறந்தநாளை முன்னிட்டு வெளியான ‘அக்கா’ டீசர்!

சென்னை 18, அக்டோபர் 2026: நெட்ஃபிளிக்ஸ் மற்றும் யஷ் ராஜ் ஃபிலிம்ஸ் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் உருவாகியிருக்கும் ‘அக்கா’ இணையத்தொடர் அக்டோபர் 30 அன்று வெளியாகிறது. நடிகை கீர்த்தி சுரேஷின் பிறந்தநாளை முன்னிட்டு இதன் டீசர் வெளியாகியுள்ளது. இதில் கீர்த்தி சுரேஷ் பவானியாகவும், ராதிகா ஆப்தே ருத்ராவாகவும் அறிமுகமாகின்றனர். பெர்னூரு பாரம்பரியமும் அதைவிட அதிகமாக பகையும் கொண்ட இடம். இங்கு ஆட்சி செய்யும் பெண்கள் யாருக்கும் அடிபணிவதில்லை. மாறிவரும் அதிகாரப் போட்டிகள் மற்றும் கொழுந்துவிட்டெரியும் பகைமைகளால் உருவான பெர்னூரு ராஜ்ஜியத்தின் மையமே இந்த இரண்டு பெண்கள் தான்.

யஷ் ராஜ் ஃபிலிம்ஸ் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் உருவாகியிருக்கும் ‘அக்கா’, பெண்களை மையமாகக் கொண்ட பிரம்மாண்டமான கேங்ஸ்டர் கதை. இத்தொடரை எழுதி, இயக்கியிருக்கிறார் அறிமுக இயக்குநர் தர்மராஜ் ஷெட்டி. 1980-களின் பின்னணியில் உருவாகியிருக்கும் ‘அக்கா’, தலைமுறை தலைமுறையாகப் பெண்களால் கட்டமைக்கப்பட்டு, ஆளப்பட்டு, பாதுகாக்கப்பட்ட பெர்னூரு என்ற கற்பனை உலகத்தை பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது.

தனது பிறந்தநாளை முன்னிட்டு ‘அக்கா’ தொடரின் டீசர் வெளியானது மற்றும் தொடரின் அனுபவம் குறித்து கீர்த்தி சுரேஷ் பகிர்ந்து கொண்டதாவது, “என்னுடைய பிறந்தநாளன்று ‘அக்கா’ டீசர் வெளியிட்டிருப்பது ரொம்பவே ஸ்பெஷல். இதுவரை நான் நடித்த கதாபாத்திரங்களிலேயே மறக்க முடியாதது பவானி தான். ராதிகாவுடன் இணைந்து பணியாற்றியது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எங்களுடைய கதாபாத்திரங்கள் கதைக்கு சுவாரஸ்யமான பல பரிமாணங்களை தரும். நெட்ஃபிளிக்ஸ் மற்றும் யஷ் ராஜ் ஃபிலிம்ஸ் என்டர்டெயின்மென்ட்



நிறுவனங்களுடன் நான் இணைந்து பணியாற்றும் முதல் தொடர் ‘அக்கா’. இந்தக் கதையின் தனித்துவமும், அதன் உலகமும்தான் என்னை ஈர்த்தது. நிச்சயம் பார்வையாளர்களுக்கும் இது பிடிக்கும் என நம்புகிறேன்” என்றார்.

நடிகை ராதிகா ஆப்தே பகிர்ந்து கொண்டதாவது, "‘அக்கா’ தொடரின் வெளியீட்டுத் தேதி அறிவிப்பும் டீசர் வெளியீடும் கீர்த்தியின் பிறந்தநாளன்று வெளியிட்டிருப்பது மகிழ்ச்சி. நான் நடித்திருக்கும் ருத்ரா கதாபாத்திரம் மிகவும் சுவாரஸ்யமானது. அவள் தனது கொள்கைகளால் வழிநடத்தப்படுபவள். தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையே கேள்விக்குள்ளாக்கும் இயல்பும் அவளுக்கு உண்டு. கதாபாத்திரங்களின் சிக்கலான தன்மையும், அவர்களின் மாறுபட்ட கண்ணோட்டங்களால் உருவாகும் பதற்றங்களும்தான் என்னை இந்தத் தொடரில் நடிக்க சம்மதிக்க வைத்தது.

கடந்த பல ஆண்டுகளாக நெட்ஃபிளிக்ஸுடன் இணைந்து பணியாற்றி வருகிறேன். இதில் ‘அக்கா’ மறக்க முடியாத தொடர். சுவாரஸ்யமான இந்தக் கதையை யஷ் ராஜ் ஃபிலிம்ஸ் என்டர்டெயின்மென்ட் நிறுவனம் தயாரித்துள்ளது. பார்வையாளர்களின் விமர்சனங்களுக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்” என்றார்.

## இரவிலும் சூரிய ஒளியைப் பெற கண்ணாடி பொருத்திய செயற்கைக்கோள்கள்: விண்வெளிக்கு அனுப்ப இந்திய நிறுவனத்தின் உதவியை நாடும் அமெரிக்கா

சென்னை 18, அக்டோபர் 2026: இரவு நேரத்திலும் பூமியில் குறிப்பிட்ட இடங்களில் சூரிய ஒளியைப் பாய்ச்சும் தொழில்நுட்பத்தைச் செயல்படுத்த அமெரிக்காவின் ரிஃப்ளெக்ட் ஆர்பிட்டல் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதற்காக, சூரிய ஒளியைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளைக் கொண்ட செயற்கைக்கோள்களை விண்வெளியில் நிலைநிறுத்த உள்ளது. செயற்கைக்கோள் மூலம் எப்படி ஒளி கிடைக்கும்? பூமியின் இரவுப் பகுதியில் நேரடியாகச் சூரிய ஒளி படாது. ஆனால், விண்வெளியில் கண்ணாடி பொருத்திய செயற்கைக்கோளை நிலைநிறுத்தி, சூரிய ஒளியைப் பூமியில் குறிப்பிட்ட இடத்துக்குத் திருப்ப முடியும் என்பதே இத்திட்டத்தின் அடிப்படை.

செயற்கைக்கோளின் நிலை, கண்ணாடியின் கோணம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி, தேவையான இடத்தில் ஒளியைப் பாய்ச்சத் திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் ஐந்து கி.மீ. அகலமுள்ள பகுதிக்கு ஒளி அளிக்கவும், அதன் பிரகாசத்தைக் கூட்டிக் குறைக்கவும், தேவை முடிந்ததும் நிறுத்தவும் முடியும் என நிறுவனம் கூறுகிறது. எனினும், இந்தத் தொழில்நுட்பம் இன்னும் வளர்ச்சிக் கட்டத்தில் உள்ளது. பேரிடர் மீட்புப் பணிகளுக்குப் பயன்படும்: இரவு நேரத்தில் பேரிடர் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும், தொலைதூரத் தொழிற்சாலைகள் மற்றும் முக்கியக் கட்டமைப்புகளுக்கு வெளிச்சம்



அளிக்கவும் இத்தொழில்நுட்பம் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சூரிய மின்நிலையங்களில் மின் உற்பத்தியை நீட்டிப்பதும் இதன் நோக்கங்களில் ஒன்று. ஆனால், இதன் நடைமுறைச் சாத்தியமும் செலவுப் பயனும் இன்னும் நிரூபிக்கப்படவில்லை. இத்திட்டத்துக்காக இந்தியாவின் ஸ்கைரூட் நிறுவனத்தின் விக்ரம்-1 ராக்கெட் மூலம் முதல் செயற்கைக்கோளையும், மேம்படுத்தப்பட்ட விக்ரம்-1யு ராக்கெட் மூலம் இரண்டாவது செயற்கைக்கோளையும் ஏவ ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் அமைப்புகள் எதிர்ப்பு

1993-ஆம் ஆண்டு ரஷிய விஞ்ஞானிகள் ‘ஸ்னாம்யா’ திட்டத்தின்கீழ் விண்வெளியில் கண்ணாடியை நிலைநிறுத்தி சூரிய ஒளியைப் பூமிக்குத் திருப்பினர். நிதிப் பற்றாக்குறையால் அந்தத் திட்டம் பின்னர் கைவிடப்பட்டது. தற்போதைய திட்டத்துக்கு எதிராகச் சுற்றுச்சூழல் அமைப்புகள் குரல் எழுப்பியுள்ளன. இரவில் பாய்ச்சப்படும் பிரகாசமான ஒளி வன விலங்குகளைப் பாதிக்கலாம்; வானியல் ஆய்வுகளுக்கு இடையூறு ஏற்படுத்தலாம்; மனிதர்களின் உடல் நேரச் சுழற்சியையும் பாதிக்கலாம் என அவை எச்சரித்துள்ளன.




## வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் பணியில் சேர்ந்த 5 நாளில் டிஸ்மிஸ்

சென்னை 18, அக்டோபர் 2026: வெள்ளை மாளிகையின் புதிய செய்தித் தொடர்பாளராகப் பொறுப்பேற்ற கேட்டி ஜக்கரியா, பணியில் சேர்ந்த ஐந்தே நாட்களில் டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளை மாளிகையின் முந்தைய செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட்டுக்குப் பதிலாக, கேட்டி ஜக்கரியாவை புதிய செய்தித் தொடர்பாளராக அதிபர் டிரம்ப் கடந்த அக்டோபர் 9ம் தேதி நியமித்தார்.

பதவியேற்ற பின்னர் தனது முதல் அதிகாரப்பூர்வ செய்தியாளர் சந்திப்பை நடத்திய ஜக்கரியா, செய்தியாளர்களின் கேள்விகளை எதிர்கொள்வதில் கடுமையான தடுமாற்றத்தை வெளிப்படுத்தினார். குறிப்பிட்ட மூன்று ஊடகங்களின் கேள்விகளுக்கு மட்டுமே பதிலளித்த அவர், சுமார் 14 நிமிடங்களிலேயே செய்தியாளர் சந்திப்பை முடித்துக் கொண்டு வெளியேறினார். மேலும், உரிய தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெறாமல் தன்னை வழக்கறிஞர் எனக் கூறிக்கொண்டதாகவும்



அவர் மீது குற்றச்சாட்டு எழ, கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டார்.

இந்நிலையில், வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்த அதிபர் டிரம்ப் கூறியதாவது:

ஊடகங்களில் ஜக்கரியா மீது கடுமையான விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன. இத்தகைய விமர்சனங்களை அவர் எதிர்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். நிம்மதியாக இருப்பதே சிறந்தது. இந்த விமர்சனங்கள் அவருக்கு தேவையா என அவரிடம் நான் பேசினேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.